## *21. தன்னையாள்சுவாமி.*

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**ன்னு மீன்ற மைந்த ரும்பு லாலு டம்பு மிந்தியம்
பின்ன வுண்ம னாதி யுட்பி ராண னுந்தொல் லாதனுஞ்
சின்ன மின்றி யொன்றற் கொன்று சேட தாமவ் வாதனுன்
தன்னை நீத்து முய்யு மோவென் றன்னை யாள்சு வாமியே. 1

**போ**க காண்ட போக்கிய காண்ட யாப்பி னைப்பொ ருந்திமேல்
ஊக மின்றி நிற்கு மாத னோச்சி டும்பி ரேரகம்
ஆக வோது காண்ட நீத்த டங்கி னால லாதஞர்ச்
சாக ரங்க டக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே. 2

**சூ**க்க மாம சுத்த மாயை தன்னை மூலத் தொக்கதாய்
நீக்க மின்றி யேற்ற வாத னீக்கு மாற நிந்திருள்
வீக்கம் வீட வாற்றும் வன்மை வீடு முன்னு றாவிடின்
தாக்கும் வாதை நீக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே. 3

**கி**ரண வாக மஞ்சொல் வண்ணங் கிரண சோமன் போன்றவோர்
கரண தேக முங்கி ளர்ந்த காரி யத்து வக்கதுந்
துரும வேரின் றழைவு நேரத் தோன்று தூல தேகமுஞ்
சரத வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 4

**தூ**ல பூத னாச ரீர முஞ்சி மிழ்த்த சூக்கமுங்
கோல மானு மோகி னிச்சொற் கொண்ட துங்கொன் விந்துவும்
மூல மாகு மொன்றற் கொன்றிம் மூல பந்த மெய்ம்மையே
சாலுன் னோக்கின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 5

1. **சின்னம்** = சிறுமை; **சே - திவாகரம்** - "இறையணு வஞ்சஞ்சிறிதுசின்னம்" என்று கூறுதலினறிக. சேடு = பெருமை; **பி - நிகண்டு.**

4. **கிரண + ஆகமம்** = கிரணவாகமம் ; தமிழ்நூன் முடிபு.

**பூ**த னாச ரீரம் போய போது சூக்க யாக்கையாய்
ஓது டம்பொ டேயி ருந்தவ் வுற்ற சூக்கந் தன்னிலே
யாத னாச ரீரந் தோன்றி யாத னைக்கு ளாதலுன்
சாத வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 6

**தோ**ன்றும் யாத னாச ரீரந் துக்க மாய வூழலும்
ஆன்ற சொர்க்க மும்பு சிக்க வாகும் பூத சாரமாம்
மான்றல் சாரு மவ்வி ரண்டு வல்வி லங்கு முன்னருட்
சான்று வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 7

**பூ**வி லேயு டம்பி ழந்த போதி யாதொர் தூலமெய்
மேவ லுங்கல் லொத்து விண்ணி லேகி டந்து வீழ்கதிக்
கேவ யங்கு பூத சார மேற்று மீண்டு திப்பதுந்
தாவில் வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 8

**ச**டத்தை நீத்த பின்க னாவைச் சார்ந்த தேய்ப்ப வாத்துமா
அடுத்து நிற்ப னென்று கார ணாக மம்ப கர்ந்தவா
றொடுக்க மான கனவை யொப்ப வுணர்வு மாறி மறிவதுந்
தடத்த வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. 9

**ஓ**சை யாதி யைந்த கந்தை யுற்ற புத்தி நெஞ்செனாப்
பேசொ ரெட்டு மேநு ணங்கு பெற்றி யாகு சூக்கமீ
தேசு ளோர றிந்து நேட லெவ்வ ணம்பு கழ்க்கவித்
தாச னெந்தை தெய்வ மேயென் றன்னை யாள்சு வாமியே. 10

---

7. **ஊழல்** = நரகம்; **சூ - நிகண்டு.**

9. **சடம்** = அறிவில்பொருள்; ஈண்டுத் தூலதேகம்.

10. **சூக்கம்** = சூக்குமதேகம்; இது, புரியட்டகமெனப்படும். இதுபற்றி யறியவேண்டிய செய்திகள், தகராலயரகசியத்தின் முதலாங்காண்டத்துப் 13-ன் உரையி லுள்ளன.